உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருப்பெருந்துறை தலவரலாறு



T15812
R005G07
T.15812

அருள்மிகு ஆத்மநாதசுவாமி திருக்கோயில்

2001

விலை ரூ. 10.00

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# திருப்பெருந்துறை
# தலவரலாறு
# THIRUPPERUNTHURAI

இது
திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
*23-ஆவது குரு மகாசன்னிதானம்*
**சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய**
**சுவாமிகள் அவர்கள்**
திருவுளப்பாங்கின் வண்ணம் வெளியிடப்பெறுவது.

*அருள்மிகு ஆத்மநாதசுவாமி திருக்கோயில்*

உரிமை பதிவு:

விலை ரூபா: **10.00**

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி ஆஃப்செட் அச்சகம்
திருவாவடுதுறை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# உள்ளே...


1. தலத்தின் இருப்பிடமும் சூழலும் 5

2. திருக்கோயில் அமைப்பு 7

3. தல சம்பந்தப்பட்ட நூல்கள் 15

4. மூர்த்தி தீர்த்தம் தலம் 17

5. திருக்கோயில் பூசை நடைமுறைகள் 21

6. மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு 34

7. A Brief about Thirupperunthurai 38

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

– தவத்திரு மாதவச் சிவஞான முனிவர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



திருவாவடுதுறை ஆதீனம் குருமுதல்வர்

# அருள்திரு நமசிவாயமூர்த்திகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# திருப்பெருந்துறை தலவரலாறு

## 1. தலத்தின் இருப்பிடமும் சூழலும்

சிவம் பெருக்கும் திருநூலாக – சிந்தைக்குத் தித்திக்கும் செந்தமிழ்த் தேனுக – படிக்கின்றவர்கள் அனைவரையும் அமரர் ஆக்கும் அருள்நூலாகத் திகழ்வது திருவாசகம் ஆகும். அத்தகைய திருவாசகத்தின் பாடல்கள் இடையிடையே திருப்பெருந்துறை என்ற தொடர் வருதலைப் பார்க்கிறோம்.

திருப்பெருந்துறை ஒரு திவ்வியத் திருத்தலம். இத்தலம் இன்று ஆவுடையார்கோயில் என்ற பெயரில் வழங்கப் பெற்று வருகிறது. இது மயிலாடுதுறை – காரைக்குடி புகைவண்டிப் பாதையில் அறந்தாங்கிக்குத் தென்கிழக்கில் பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. இக்காலத்தில் பேருந்து ஊர்தி வசதி உண்டு.

பாண்டி நாட்டுக்கு உட்பட்டதாக, அந்நாட்டின் வடகிழக்கு எல்லையாக முற்காலத்தில் விளங்கிய இவ்வூர், தற்போது புதுக்கோட்டை மாவட்டத்திற்கு உட்பட்டதாக அம்மாவட்டத்தின் தென் எல்லையிலிருக்கிறது. வெள்ளாற்றங்கரையில் தோப்பும் துரவும், சோலையும் சாலையும் சூழ்ந்த மணற்பாங்கான இடம். வயற் பரப்பும், சிறு காடும் கலந்து விளங்குவதால் இவ்வூரை மருதமொடு தழுவித் திகழும் முல்லை நிலம் என்று கூறலாம்.

கோயில் கணக்குகளில் இந்தத் தலம் ஆளுடையார் கோயில் என்றே வழங்கப் பெறுகின்றது. திருமுறைகளிலும் வடமொழி தமிழ் மொழி இலக்கியங்களிலும் – அநாதி மூர்த்தித் தலம்,

ஆதிகயிலாயம், உபதேசத் தலம், குருந்தவனம், சதுர்வேதபுரம், ஞானபுரம், திரிமூர்த்திபுரம், தட்சிண கைலாயபுரம், தென்கைலை, தேசுவனம், பராசத்திபுரம், பூலோக கைலாயம், யோகபீடபுரம், யோகவனம் முதலான பல பெயர்களால் குறிக்கப் பெறுகின்றது. திருவாசகம் – சிவபுரம் என்று குறிக்கின்றது. கல்வெட்டுக்களில் **'மிழலைக் கூற்றத்து நடுவிற் கூற்றம் பிரமதேசம் தனியூர்த் திருப்பெருந்துறையான பவித்திரமாணிக்கச் சதுர்வேதி மங்கலம்'** என்று வழங்கப் பெற்றுள்ளது.

திருக்கோயிலை நடுவாக வைத்து ஊர், கிழக்கு மேற்கில் வளர்ந்துள்ளதால் கோயிலின் பெயரே தலத்திற்கும் ஏற்பட்டது எனக் கருதலாம். இவ்வூரில் பல குளங்களும், கிணறுகளும் ஆறும் காலும் சூழ்ந்திருப்பதால் தண்ணீர் வசதிக்குக் குறைவில்லை. திருவாசகம் படித்தவர்களெல்லாரும் மாணிக்கவாசகர்க்கு உபதேசம் அருளிய பெருமை மிகுந்த தலம் என்று பேரன்புடன் இத்தலத்தைத் தரிசிக்க வருகின்றனர். திருக்கோயிலிலுள்ள கலைச் செல்வங்களைக் கண்டு மகிழ விருப்பத்தோடு சுற்றுலாப் பயணிகளும் வருகின்றனர். இவர்களெல்லாம் தங்குவதற்கு ஏற்ற வசதியான பல விடுதிகளும் மடங்களும் இவ்வூரில் உள்ளன. இத்திருக்கோயில் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானது ஆதலால் திருவாவடுதுறை ஆதீனத்துக் கிளை மடம் ஒன்று எல்லா வசதிகளும் நிறைந்ததாக உள்ளது.

இங்கு வாழ்கின்ற மக்களுள் பெரும்பாலோர் உழவர்கள். சிறுவர்கள் கல்வி பயில்வதற்குரிய தொடக்கநிலைப் பள்ளிகள் உள்ளன. காவல்துறை அலுவலகமும், வருவாய்த்துறை அலுவலகமும், அஞ்சலகமும் இவ்வூரில் உள்ளன.

தீர்த்தங்களும், திருக்கோயிலும், கோயிலில் அமைந்து உள்ளன. அதி அற்புதமான சிற்பக் கலைச் செல்வங்களும் இவ்வூருக்கு மகத்தான பெருமையைத் தருவனவாக விளங்குகின்றன.

# 2. திருக்கோயில் அமைப்பு:

திருப்பெருந்துறை ஆத்மநாதசுவாமி திருக்கோயில் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலுக்கு உள்ளே மூன்று பிரகாரங்கள் உள்ளன. வெளியே மடவளாகத் தெருக்களும், தேரோடும் நான்கு வீதிகளும் உள்ளன. இக்கோயிலில் கொடி மரமும் பலிபீடமும் நந்தியும் இல்லை. சண்டேசர் ஆலயமும் இல்லை.

இறைவன் நம்மீது வைத்த பரம கருணையினால் நம்முடைய பக்குவத்திற்கு ஏற்றபடி உருவமாயும், அருவமாயும், அரு உருவமாயும் தலங்களில் எல்லாம் எழுந்தருளி அருள்பாலிக்கிறான். அவற்றுள் இத்தலத்தில் பெருமான் அருவமாகவே - அதாவது உருவம் ஒன்றும் இன்றியே எழுந்தருளியிருக்கின்றார். அருவமாய் எழுந்தருளியிருக்கும் பெருமானுக்கு உருவமான நந்தி முதலான இந்த அங்கங்கள் வேண்டாமல்லவா? தியானம் செய்கின்றபோது தியானிக்கின்றவர்களுடைய அகமுகப் பார்வை இருக்கிறதே அதுவே நந்தி. வீணா தண்டாகிய சுழுமுனை வழியாக மேல்நோக்கிப் புருவ மத்திவரை செல்கின்ற தியானமே கொடிமரம். அதில் ஏறியிருக்கிற கொடியும், மணிபூரகமாகிற மார்புப் பகுதியே பலிபீடம். இங்கே எல்லாம் ஞானமயம். ஆதலால் உருவம் ஒன்றுமில்லை என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும்.

## *பெரிய மண்டபம்:*

இராஜகோபுர வாயிலுக்கு வெளியே அதனை ஒட்டினாற்போல் பெரிய மண்டபம் இருக்கிறது. இதற்கு ரகுநாத பூபால மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் என்ற வேறு பெயர்களும் உள்ளன. இம் மண்டபத்தின் தெற்கு முகப்புத் தூண்களில் நரசிம்மர், காளி, ஊர்த்தவ தாண்டவர், பிட்சாடனர், வேலேந்திய முருகன், ரிஷபாந்தகர், சங்கர நாராயணனர் என்னும் ஏழு சிற்பங்கள் உள்ளன. இம்மண்டபத்தின் தெற்கில் உள்ள இரண்டு பெரிய தூண்களில் அகோர வீரபத்திரர், அக்கினி வீரபத்திரர் சிற்பங்கள் உள்ளன. வடக்கில் உள்ள இரு பெரிய தூண்களில் துவாரபாலகர் சிலைகள் இரண்டு உள்ளன. மற்றுமுள்ள நான்கு தூண்களில் நான்கு குதிரை வீரர்களின் சிற்பங்கள் பொலிவுடன் காணப்

படுகின்றன. இம் மண்டபத்தின் மேல் தளத்தில் தக்ஷிணா மூர்த்தி, காமதகனம், சிவவிசுவரூபம், முதலிய ஓவியங்கள் தீட்டப் பெற்றுள்ளன.

### *மாணிக்கவாசகர் மூலவர் கோயில்:*

பெரிய மண்டபத்தை ஒட்டினாற்போல அதற்கு மேற்கில் உள்ள மண்டபத்தில் மாணிக்கவாசகரின் மூலவர் கோயில் ஒன்று உள்ளது. இது பழமையான கோயில். இங்கு மாணிக்க வாசகர் கிழக்கு முகமாக எழுந்தருளியுள்ளார். இக்கோயில் – கருவறை, அர்த்த மண்டபம், பிரகாரம், விமானம் ஆகிய அமைப்புக்களுடன் விளங்குகிறது.

### *இராஜகோபுரம்:*

இக்கோபுரம் ஏழு நிலைக் கோபுரமாக எழிலுடன் திகழ்கிறது. இக்கோபுர வாயிலின் நிலைக் கற்களிலும் சுவரிலும் கல்வெட்டுகள் உள்ளன. இக்கோபுரத்தின் வடக்குப் பார்வையில் கீழ்புறத்தில் பெருந்துறைக் குமாரர் (சுப்பிரமணியர்) எழுந்தருளியுள்ளார்.

### *வெயிலுவந்த விநாயகர்:*

மூன்றும் பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் உள்ள நான்கு கால் மண்டபத்தில் வெயிலுவந்த விநாயகர் கிழக்கு முகமாக எழுந்தருளியுள்ளார். இம்மண்டபத்தில் மூன்று விநாயகத் திருமேனிகள் இருப்பினும் நடுவில் இருப்பவரே பிரதான மூர்த்தி. இவரை முதலில் வணங்கி வழிபட்ட பின்னரே கோயிலுட் சென்று வழிபடவேண்டும் என்பது மரபு.

### *அக்கினி தீர்த்தம்:*

வெயிலுவந்த விநாயகர் மண்டபத்திற்கு வடக்கே சிறிது தூரத்தில் அக்கினி தீர்த்தம் இருக்கிறது. பிரகார நடைபாதைக்கு மேற்கில் நான்குபுறமும் படிக்கட்டுக்களோடு அழகாக இத்தீர்த்தக் குளம் விளங்குகிறது. இத்தீர்த்தக் குளத்தைத் 'திருத்தமாம் பொய்கை' என திருவாசகம் குறிப்பிடும்.



பரிசதீட்சை



நயனதீட்சையும் உபதேசமும்



பூவார் அடிச்சுவடு பொறித்தல்



திருவாதவூரர் திருப்பணி செய்விக்கின்றார். பணிகள் விரைவாக நடக்கின்றன.

## தியாகராஜ மண்டபம்:

அக்கினி தீர்த்தத்திற்கு வடக்கே இப்பிரகாரத்தின் வடகோடியில் தியாகராஜ மண்டபம் இருக்கிறது. இதற்கு அச்சுதப்ப பூபால மண்டபம் என்ற பெயரும் உண்டு. இம்மண்டபத்து இரண்டு பெரிய தூண்களில் குதிரை வீரர் சிற்பங்கள் இரண்டு உள்ளன. மண்டபத்தின் நடுவில், உள்மதிலை ஒட்டினாற்போல் மேற்கு முகமாக முத்து விநாயகர் சந்நிதி உள்ளது. இம்மண்டபத்தின் மேல் தளத்தில் கருங்கல் சங்கிலி தொங்குகிறது. இந்த மண்டபத்தின் வடக்குப் பகுதியில் ஊஞ்சல் மண்டபம் ஒன்று இருக்கிறது. இவ்விரு மண்டபங்களும் ஒன்றுபோல் இணைக்கப்பட்டு மேல் தளத்தால் மூடப்பட்டிருக்கிறது. மேல் தளத்தின் நான்கு பக்கங்களிலும் உள்ள கொடுங்கைகள், அதி அற்புதமான வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. வடகிழக்குப் பகுதியிலுள்ள கொடுங்கையில் சில துளைகளைக் காணலாம். இத்துளைகள், கொடுங்கையின் கனம் எவ்வளவு என்பதை அறியத் துணையாகின்றன. இத்துளைகள், ஆங்கிலேயர் துப்பாக்கியால் சுட்டமையால் உண்டானவை என்றும், கொடுங்கை அமைத்த சிற்பியே தன் சிற்பவேலைத் திறனை அறிவிக்க வேண்டி ஏற்படுத்தியவை என்றும் கூறுகின்றனர். கொடுங்கையின் கனம் சுமார் ஓரங்குலம் எனத் தெரிகிறது.

## ஊஞ்சல் மண்டபம்:

தியாகராஜ மண்டபத்திற்குள்ளே வடக்குப் புறத்தில் ஊஞ்சல் மண்டபம் அமைந்திருக்கிறது. உயரமான மேடைமேல் இம்மண்டபம் உள்ளது. ஆனி மாதத்திலும் மார்கழி மாதத்திலும் நடைபெறும் திருவிழாக்களில் மூன்றும் நாள் விழாவில் மாணிக்கவாசகர் இங்கே எழுந்தருளிக் காட்சி வழங்குவது வழக்கம்.

## தலவிருட்சம்:

தியாகராஜ மண்டபத்துக்கு அப்பால் வடமேற்கு மூலையில் வெளி மதிலை ஒட்டினாற்போல் அமைந்த திருமாளிகைப் பத்தியில்

தல விருட்சமான குருந்த மரங்கள் இரண்டு உள்ளன. இவ்விருட்சங்களை வலம் வருவதற்கு மேடையில் இடைவெளி இருக்கிறது. இப்பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் மடைப்பள்ளி இருக்கிறது.

### *வசந்த மண்டபம்:*

மூன்றும் பிரகாரத்தில் கிழக்குப் பகுதியில் வெளிமதிலை ஒட்டித் திருமாளிகைப் பத்தி மண்டபம் உள்ளது. மடப்பள்ளிக்குத் தெற்கே திருமாளிகைப் பத்தியில் வசந்த மண்டபம் இருக்கிறது. இம்மண்டபத்தின் நடுவில் ஒரு மேடையும் அதனைச் சுற்றி நீராழியும் உள்ளன. இந்த மேடைக்கு வடக்கே வசந்த விநாயகர் எழுந்தருளி உள்ளார். ஆனி, மார்கழி மாத விழாக்களில் ஐந்தாந் திருநாள் விழாவன்று மாணிக்க வாசகர் இம்மண்டபத்தில் எழுந்தருளிக் காட்சி வழங்குவது வழக்கம். இதற்குத் தெற்கே திருமாளிகைப் பத்தியில் நெற்களஞ்சிய அறைகளும் அரிசிக் களஞ்சிய அறைகளும் உள்ளன.

### *பஞ்சாட்சர மண்டபம்:*

மூன்றும் பிரகாரத்தில் இரண்டாம் கோபுர வாயிலை ஒட்டினாற் போல் பஞ்சாட்சர மண்டபம் இருக்கிறது. இதற்குக் **'கனகசபை'** என்ற பெயருமுண்டு. இம்மண்டபம் நடுவில் சதுர அமைப்பும் நான்கு புறமும் தாழ்வார அமைப்பும் கொண்டிருக்கிறது. நடுப்பகுதியிலுள்ள தூண்களில் குதிரைச் சாமி என்ற அசுவநாதர் சிற்பமும், பாண்டிய மன்னன் சிற்பமும், மாணிக்கவாசகரின் அமைச்சர் கோலச் சிற்பமும், குறும்பர்கோன் சிற்பமும் உள்ளன. இம்மண்படத்தின் மேல் தளத்தில் – மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்ற ஆறு அத்துவாக்களும் கட்டங்களாக அமைத்துக் காட்டப்பெற்றுள்ளன. மேல் தளத்தை ஒட்டியமைந்த ஒரு சரத்தில் முந்நூற்றொருவர் சிற்பமும், நம்பிமார் ஒருவர் சிற்பமும் உள்ளன.

## *மாணிக்கவாசகர் மூலவர் கோயில்: (புதுக்கோயில்)*

மூன்றும் பிரகாரத்தில் பஞ்சாட்சர மண்டபத்தை ஒட்டினாற்போல் அம்மண்டபத்திற்கு மேற்கில் மாணிக்கவாசகரின் மூலவர் கோயில் ஒன்று இருக்கிறது. இது புதுக்கோயில் ஆகும். திருவாவடுதுறை ஆதீனம் 15–ஆவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் அவர்களாலும் 16–ஆவது குரு மகாசந்நிதானம் மேலகரம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்களாலும் கட்டுவிக்கப் பெற்றது இக்கோயில். இக்கோயிலில் மாணிக்கவாசகர் கிழக்கு முகமாக எழுந்தருளியுள்ளார். பிரகார அமைப்புடன் இக்கோயில் உள்ளது. கருவறைக்கு எதிரே உள்ள முன்மண்டபத் தூண்களில் திருவாவடுதுறை ஆதீனம் 15–ஆவது குரு மகாசந்நிதானம் அவர்களின் திருவுருவச் சிலையும், காறுபாறு ஸ்ரீமத் வைத்தியநாதத் தம்பிரான் உருவச் சிலையும் வடக்கு முகமாக உள்ளன. 16–ஆவது குரு மகாசந்நிதானம் அவர்களின் திருவுருவச் சிலையும் அக்காலத்து இத்தலக் கட்டளை சுவாமிகள் ஸ்ரீமத் சுப்பிரமணியத் தம்பிரான் உருவச் சிலையும் தெற்குமுகமாக உள்ளன. இவைகள் தத்ரூபமாக மிக்க எழிலுடன் விளங்குகின்றன.

## *இரண்டாம் பிரகாரம்:*

பஞ்சாட்சர மண்டபம் வழியாக இரண்டாம் கோபுர வாயிலைக் கடந்தால் இரண்டாம் பிரகாரத்தை அடையலாம். இங்கே முதல் கோபுர வாயிலுக்கு வெளியே அதை ஒட்டினாற்போல் தில்லை மண்டபம் இருக்கிறது. இரண்டாம் பிரகாரத்தின் மேற்கு வடக்கு கிழக்குப் பகுதிகளில் நடுவில் நடைவான பத்தியும் அதன் இருபுறமும் திருமாளிகைப் பத்தி மண்டபமும் தொடர்ந்து அமைந்துள்ளன. இப்பகுதிகள் மூன்றும் மேல்தளம் இட்டு மூடப்பட்டுள்ளன.

## *தில்லை மண்டபம்:*

இரண்டாம் பிரகாரத்தின் தெற்குப் பகுதியில் முதல் கோபுர வாயிலை ஒட்டினாற்போல் தில்லை மண்டபம் இருக்கிறது. இதற்கு நடன சபை என்ற பெயரும் உண்டு. இம்மண்டபத்தின் இரண்டு தூண்களில் பதஞ்சலி, வியாக்கிரபாதர் சிற்பங்கள் உள்ளன.

மற்றும் இம்மண்டபத்தின் நான்கு தூண்களில் குறவன் குறத்தி சிற்பங்கள் உள்ளன. இவை உலகப் புகழ்பெற்ற அதி அற்புதமான சிற்பங்கள்.

## *ஆத்மநாதர் கோயில்:*

தில்லை மண்டபத்தை அடுத்துள்ள முதற் கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் முதல் பிரகாரத்தை அடையலாம். இப் பகுதியின் மத்தியில் ஆத்மநாதப்பெருமான் மூலக்கோயில் இருக்கிறது. இது கருப்பக்கிரகம், அர்த்தமண்டபம், அமுது மண்டபம் என்று மூன்று பகுதிகளாக அமைந்திருக்கிறது. கருப்பக் கிரகத்தில் ஆவுடையார் என்ற பீடம் மட்டுமே உள்ளது. மற்ற சிவாலயங்களில் உள்ள சிவலிங்கத்திருமேனி மூன்று பகுதியாக அமைவது மேலே பாணம்—குழவி போன்ற பகுதி. அதன் அடியில் ஒரு பீடம். அதற்கும் அடியில் ஒரு பீடம். நடுவிலுள்ள பீடத்திற்குச் சத்திபீடம் என்று பெயர். அடியிலுள்ள பீடத்திற்கு பிரமபீடம் என்று பெயர். இம்மூன்று பகுதிகளையும் கொண்ட சிவலிங்கத் திருவடிவத்தையே மற்றத் தலங்களில் தரிசிக்கிறோம். இங்கே சத்தி பீடமாகிய பகுதி மட்டுமே இருக்கிறது. அதற்கு மேலே குவளைசாத்தி அலங்காரம் செய்வது, தரிசிக்க வருபவர்கள் கண்டு உய்வதற்காக சத்தி பீடத்தில் அறிவொளி வடிவாக ஆன்ம நாயகனைத் தியானித்து வழிபடுதல் வேண்டும். உருவம் இல்லாத அருவமாக இறைவன் காட்சி வழங்குகிறார். ஆன்ம நாதர் என்ற பெயரைத் தாங்குகிறார்.

ஆவுடையார்க்குப் பின்புறச் சுவரில் 27 நட்சத்திரத் தீபங்களும் அதற்கு மேல் சூரிய சந்திர அக்கினி என்ற மூன்று தீபங்களும் சுடர்விடுகின்றன—சுவாமி திருமுன்பு அமுத மண்டபத்தில் உள்ள படைகல்லில் புழுங்கல் அரிசி அன்னத்தை ஆவி புலப்பட பரப்பி அதைச் சூழத்தேங்குழல், அதிரசம், அப்பம், வடை முதலானவற்றை வைத்து நிவேதனம் செய்து தீபாராதனைகள் முறைப்படி செய்யப்படும்.

## *சுந்தரபாண்டியன் மண்டபம்:*

ஆத்மநாதர் மூலக்கோயிலுக்கு எதிரே சுந்தர்பாண்டியன் மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் தெற்குப் புறத்தில் உள்ளது பிரதான வாயில். இவ்வாயில் வழியாக உள்ளே நுழைவது

வழக்கத்தில் இல்லை. உற்சவ மாணிக்கவாசகரை வணங்கிய பிறகு இம்மண்டபத்தின் மேற்குக் கர்ணத்துவார வழியாகச் சென்று ஆத்மநாதரை வழிபடுவது வழக்கமாக உள்ளது.

## *மாணிக்கவாசகர் – உற்சவமூர்த்தி சந்நிதி:*

முதல் பிரகாரத்தில் தென்மேற்குப் பகுதியில் மாணிக்க-வாசகரின் உற்சவமூர்த்தி சந்நிதி உள்ளது. மாணிக்கவாசகர் இங்கே வடக்கு முகமாகக் காட்சி தருகிறார். இச்சந்நிதியின் எதிரேயுள்ள இருபுறத்துத் தூண்களிலும் சேதுபதிகள், சிற்றரசர்கள் நம்பிமார் முன்னோரான பரமசுவாமி சிற்பங்கள் உள்ளன.

## *சொக்கவிநாயகர்:*

இப்பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் திருமாளிகைப் பத்தியில் சொக்கவிநாயகர் கிழக்கு முகமாக எழுந்தருளியுள்ளார்.

## *யோகாம்பிகை கோயில்:*

ஆத்மநாத சுவாமியின் கருவறைக்கு வடமேற்கில்–முதல் பிரகாரத்தில்–யோகாம்பிகை கோயில் உள்ளது. இக் கோயிலின் உள்ளே யோகபீடமும் அதன்மேல் அம்பிகையின் பாதங்களும் உள்ளன. அம்பிகை அரூபமாக இருப்பதால் அம்பிகைக்கு திருவுருவம் இல்லை. கோயிலின் தெற்குப்புறத்தில் உள்ள கருங்கல் பலகணி வழியாக தெரிசனம் செய்யவேண்டும். இக்கோயிலை வலம்வரப் பிரகார அமைப்பு இருக்கிறது.

## *குருந்த மூலம்:*

முதல் பிரகாரத்தில் ஆத்மநாதரின் கருவறைக்கு நேர் பின் புறத்தில் நாலுகால் மண்டபம் உள்ளது. இந்த மண்டபத்தில் குருந்த மூலசுவாமி எழுந்தருளி இருக்கிறார். இவ்வுருவில் ஆத்ம நாதர் தென்முகமாக யோகாசன மூர்த்தமாய் ஆசானாய் இருப்பது

போலவும், அவருக்கு எதிரே மாணிக்கவாசகர் உபதேசம் பெறுவது போலவும் சிறுவடிவில் சிற்பங்கள் உள்ளன. விழாக் காலத்தில் இந்தக் குருந்தடிக்கு மேற்கே உள்ள அங்கணத்தில் மாணிக்கவாச கரை எழுந்தருளுவித்து உபதேசக் காட்சி நடைபெறுவது வழக்கம்.

## *நடராசர் சந்நிதி:*

முதற்பிரகாரத்தின் வடக்குப் பகுதியில் மதிற்சுவரை ஒட்டினாற்போலத் திருவாசகக் கோயிலும், அதற்குக் கிழக்கே நடராசர் சந்நிதியும் உள்ளன. இங்கே நடராசர் சிலா ரூபமாகத் தெற்கு முகமாக எழுந்தருளி உள்ளார். (விநாயகர், முருகர், நடராசர் தவிர வேறு பரிவார மூர்த்திகள் இக்கோயிலில் இல்லை)

## *ஆத்ம நாத கூபம்;*

முதற் பிரகாரத்தில் ஆத்மநாதரின் கருவறைக்கு வடகிழக்கே ஆத்மநாத கூபம் என்ற தீர்த்தக் கிணறு உள்ளது. இதற்கு 'சிவதீர்த்தம்' என்ற பெயரும் உண்டு.

## *முடிப்புரை:*

யோகிகளும் ஞானிகளும் வழிபடும் முறையில் கோயிலை மூலாதாரம் முதலாக ஆறு ஆதாரங்களின் வடிவாகவும், சுவாமியை அரூபமாகவும் வைத்து இத்திருக்கோயில் அமைவு பெற்றிருக்கிறது. அதனால் ஏனைய கோயில்களின் அமைப்புகளிலி ருந்து இக்கோயிலின் அமைப்பு பல வேறுபாடுகளை உடையதாக இருக்கிறது. ஏனைய கோயில்கள் சரியை, கிரியை மார்க்கத்தாருக்கு உரியதாக இருக்க, இத்திருக்கோயில் யோக, ஞான மார்க்கத்தாருக்கு உரியதாக இருப்பதால் இத்திருக் கோயிலின் உயர் சிறப்பு தெற்றென விளங்கும்.



நடுப்பகலில் கடுமையான வெயிலில் நல்லடியார் நெற்றியின் மேல்
கடுஞ்செங்கல் ஏற்றிவைத்துத் துயரமிக்க தண்டித்தல்



# 3. தல சம்பந்தப்பட்ட நூல்கள்

## 1. உருத்திர சம்ஹிதை:

வியாச முனிவர் அருளிய பதினெண் புராணங்களில் ஒன்றுன ஸ்காந்த புராணத்தில் உருத்திர சம்ஹிதை ஒரு பிரிவாக உள்ளது. இது வடமொழியில் எழுதப்பட்டது.

## 2. அப்பர் தேவாரம்:

மூவரால் முழுப்பதிகம் பெற்றதான பாடல் பெற்ற தலப்பெயர்களின் வரிசையில் திருப்பெருந்துறை இடம் பெறவில்லை. ஆயினும் அப்பர் தேவாரத்தில் இத்தலம் வைப்புத் தலமாக இடம்பெற்று இருக்கிறது.

## 3. திருவாசகம்:

மணிவாசகப் பெருமானின் மலர்வாய்ப் பிறந்த தேனுன திருவாசகத்துள் 51 பகுதிகள் உள்ளன. இவற்றுள் 20 பகுதிகள் திருப்பெருந்துறையில் இருந்து அருளிச் செய்யப்பட்டனவாகும்.

## 4. திருப்புகழ்:

அருணகிரிநாதர் திருப்பெருந்துறைக்கு வந்து முருகனை வழிபட்டு மூன்று திருப்புகழ்ப் பாடல்களை அருளியுள்ளார்.

## 5. (பழைய) திருப்பெருந்துறைப் புராணம்:

இந்நூலை இயற்றியவர் திருவாவடுதுறை ஆதீன முனிபுங்கவர்களில் ஒருவரான சுந்தரலிங்க முனிவர். இந்நூல் தமிழ் மொழியில் செய்யுள் வடிவில் 58 சருக்கங்களைக் கொண்டுள்ளது. ஏடு சிதலமாகி அழிந்தது போக தற்போது 1948 விருத்தப்பாக்கள் கிடைத்துள்ளன. இந்நூல் தஞ்சை சரஸ்வதி

மகால் நூல் நிலையத்தாரால் 158–ஆம் வெளியீடாக 1978–ல் வெளியிடப் பெற்றிருக்கிறது.

## 6. திருப்பெருந்துறைப் புராணம்:

இந்நூலின் ஆசிரியர் திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஆவார். இந்நூல் தமிழ் மொழியில் செய்யுள் நடையில் 35 படலங்களையும் 1658 விருத்தங்களையும் கொண்டதாக அமைந்துள்ளது.

## 7. ஆதிகைலாய க்ஷேத்திர புராணம்:

இந்த நூல் ஆத்மநாத நம்பியாரால் வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப் பெற்று வசன ரூபமாக எழுதப்பட்டதாகும். இதற்கு மூலமாக இருந்த வடமொழி நூல் இன்னது என்பது சுட்டப்பெறவில்லை.

## 8. திருப்பெருந்துறை ஸ்தல புராண வசனம்:

இந்த நூல் சுந்தர சாஸ்திரிகளால் வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப் பெற்று வசன ரூபமாக எழுதப்பட்டதாகும். இதற்கும் மூலமாக இருந்த வடமொழி நூல் இன்னது என்பது சுட்டப்பெறவில்லை.



முடிமன்னன் வாதவூரடிகள் திருவடிகளில் வணங்குதல்



திருச்சாழல்பாடி, ஊமைப்பெண்ணைப் பேசவைத்தது

# 4. மூர்த்தி தலம் தீர்த்தம்

## 1. மூர்த்தி

### *ஆன்மநாதர்:*

திருப்பெருந்துறை தலத்தின் திருக்கோயில் கருவறையில் இவர் அரூபமாக இருக்கிருர். கருவறையில் பீடம் மட்டுமே காணப்பெறும். பீடத்துக்கு மேல் சுவாமி அரூபமாக இருப்பதால் பாணம் காணப்பெருது. பீடத்துக்குப் பிரணவ பீடம் என்றும், சதுர் வேத பீடம் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. பீடத்துக்கு மேல் குவளை சாத்தி அபிடேகம் முதலியன நடைபெறுகின்றன.

### *யோகாம்பிகை:*

திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அம்பிகை யோகாம்பிகை எனவும் சிவயோக நாயகி எனவும் பேசப்படுகிருள். அம்பிகையின் கருவறையில் யோகபீடம் மட்டுமே காணப்பெறும். இங்கே அம்பிகை அரூபமாக விளங்குகிறபடியால் உருவத் திருமேனி இல்லை. அந்த பீடத்தின் மேல் யோகாம்பிகை சிவயோகம் புரிகின்ருள்.

### *மாணிக்கவாசகர்:*

இத்தலத்தில் சோமாஸ்கந்தர் ஸ்தானத்தில் விளங்குகிறவர் மாணிக்கவாசகர். இவருக்குத்தான் உத்சவம் நடைபெறுகிறது. இந்த உத்சவத்தை பக்தோர்ச்சவம் (அடியார்க்குச் செய்யும் உத்சவம்) என்று சிலர் கூறுவர். மாணிக்க வாசகர் இறைவனேடு இரண்டறக் கலந்து சாயுச்சிய முத்தி பெற்றவர் ஆகையாலும், அவர் அறிவாற் சிவமே என்று ஞானிகளால் பேசப்படுவதாலும், இறைவன் வேறு மணிவாசகர் வேறு என்று எண்ணுவது சிவாபராதம் ஆகையாலும் அவர்க்கு எடுக்கும் திருவிழா பிரம்மோர்ச்சவமே ஆகும். இவருக்கு ஆனி, மார்கழி ஆகிய இரு மாதங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. ஆன்மநாதரின் பரிகலச் சேடம், நிர்மாலிய புஷ்பம் முதலியன இவர்க்குச் சேர்ப்பிக்கப் பெறுகின்றன.

# 2. தலம்

## திருப்பெருந்துறை:

ஆன்மநாதர் அநாதி மூர்த்தராக இங்கே எழுந்தருளி ஐந்தொழில் நடத்தலால் இது அநாதி மூர்த்தத் தலமாகும்.

உருத்திரமூர்த்தி எழுந்தருளியுள்ள கயிலைமலை துவாத சாந்தத் தலம். ஆன்மநாதர் எழுந்தருளியுள்ள திருப்பெருந்துறை சோடசாந்தத் தலம். இத்தலம் கயிலையைவிட மேலானது. இத்தலத்திற்கு ஆதியும் அந்தமும் இல்லை. இத்தலத்தை அடைந்தவர்க்கு மீண்டும் பிறப்பு இல்லை. இத்தலத்திற்கு பல பெயர்கள் உண்டு என்று புராணங்கள் பேசுகின்றன. தற்போது ஆவுடையார்கோயில் என்ற பெயர் வழங்கிவருகிறது.

# 3. தீர்த்தம்

திருப்பெருந்துறையில் பல தீர்த்தங்கள் உள்ளன. இவற்றுள் ஆன்மநாதரால் ஆதியில் உண்டானவை ஒன்பது தீர்த்தங்கள். இவை நவதீர்த்தம் எனப்படும்.

## 1. சிவதீர்த்தம்:

இது அம்பாள் சந்நிதிக்கு எதிரே கிணறு ரூபமாக இருக்கிறது. இதற்கு ஆத்மகூபம், ஆன்மநாதகூபம் என்றும் பெயர்கள் உண்டு. இதன் தீர்த்தம் ஆன்மநாதர்க்கு அபிடேகத்துக்கு மட்டும் பயன்படுத்தப்படுகிறது.

## 2. அக்கினி தீர்த்தம்:

இது ஆன்மநாதர் ஆலயத்தில் தென்மேற்கில் குளமாக இருக்கிறது. இதற்குச் சத்தி தீர்த்தம், திருத்தமாம் பொய்கை என்ற பெயர்கள் உண்டு. இதன் தீர்த்தத்தைக் கண்டாலும், தொட்டாலும், பருகினாலும், நீராடினாலும் நினைத்த பயனை பெறலாம்.

### 3. தேவதீர்த்தம்:

இது ஆன்மநாதர் ஆலயத்தின் எதிரே தெற்குத் திசையில் நெல்லியடி என்ற இடத்தில் பெரிய தடாகமாக விளங்குகிறது. இதற்கு நாததீர்த்தம் என்ற பெயரும் உண்டு. இத்தீர்த்தத்தில் நீராடுவோர் இம்மை இன்பமும் மறுமை போகமும் அனுபவித்து இறுதியில் சிவனடி சேர்ந்து பேரின்பம் எய்துவர்.

### 4. முனிவர் தீர்த்தம்:

இது திருக்கோயிலின் வடக்கு வீதிக்கு அருகில் ஓடையாக இருக்கிறது. இதற்கு விந்து தீர்த்தம், ரிஷி தீர்த்தம் என்ற பெயர்களும் உண்டு. இதில் நீராடினுல் சகல பாதகங்களும் நீங்கும்.

### 5. அசுர தீர்த்தம்:

இது திருக்கோயிலின் மேற்குத் திசையில் இருக்கிறது. இதற்கு சதாசிவ தீர்த்தம், குளிர்ச்சிக்குளம் என்ற பெயர்கள் உண்டு. இதில் நீராடுவோர் பாவங்கள் நீங்கி வீடுபேறு அடைவார்கள்.

### 6. வாயு தீர்த்தம்:

இது ஆன்மநாதர் ஆலயத்திற்கு வடமேற்குத் திசையில் இருக்கிறது. இதற்கு மகேச தீர்த்தம் என்ற பெயரும் உண்டு. இத் தீர்த்தத்தில் நீராடினுல் தீராத வியாதிகள் தீரும்.

### 7. சிவகங்கை தீர்த்தம்:

இது ஆன்மநாதர் ஆலயத்திற்கு வடகிழக்கே உள்ள கயிலாச நாதர் திருக்கோயிலுக்கு வடக்கே உள்ளது. இதற்கு உருத்திர தீர்த்தம் என்ற பெயரும் உண்டு. இதில் நீராடுவோர் கயிலாய பதவி பெறுவார்கள்.

## 8. நாராயண தீர்த்தம்:

இது திருக்கோயில் வடக்கு வீதியில் பெருமாள் கோயிலுக்கு மேற்கே ஓடை ரூபமாக இருக்கிறது. இதற்கு விஷ்ணு தீர்த்தம் என்ற பெயரும் உண்டு. இதில் மூழ்குபவர்கள் முப்பகையும் நீங்கி மெய்ஞ்ஞானம் பெற்று வீடுபேறு அடைவார்கள்.

## 9. பிரம தீர்த்தம்:

இது திருக்கோயிலுக்கு மேற்குத் திசையில் இருக்கிறது. இது முதன்மையப்பர் சந்நிதிக்குளம் என்று இப்போது சொல்லப்படுகிறது. இதில் மூழ்குகிறவர்கள் மகாபாதகங்கள் எல்லாம் நீங்கப் பெறுவர்.

மேலே சொல்லப்பட்ட நவந்தருபேதமான ஒன்பது தீர்த்தங்களேயன்றி மேலும் அறுபத்துநான்கு கோடி தீர்த்தம், வெள்ளாறு, திருத்தொட்டித் தீர்த்தம் முதலியனவும் திருப்பெருந்துறையில் உள்ளன.

## 10. அறுபத்து நான்கு கோடித் தீர்த்தம்:

இறைவனின் திருவருளால் இத்தலத்தில் வெட்டின இடமெல்லாம் நீர் பெருகியது. இப்படி வெட்டி நீர்வரக்கண்ட குளங்களே அறுபத்து நான்கு கோடித் தீர்த்தமாகும். அவைகளில் ஒருசில தற்போது குறும்பனுடையான் தோப்புக் கிணறு, கட்டளை மடத்துத் தோப்புக் கிணறு, கணநாதர் கோயில் கிணறு, ராமகங்கை ஓடை என்ற பெயர்களில் பேசப்படுகின்றன.

## 11. வெள்ளாறு:

இது ஆவுடையார்கோயிலுக்கு வடக்கே ஓடுகிறது. இதற்கு ஆனந்த வெள்ளாறு என்ற பெயரும் உண்டு.



திருவாசகமென்னுஞ் செந்தமிழின் பெருநூலை
அம்பலத்தான் படியெடுத்து அனைவருக்கும் உவந்தளித்தல



மாணிக்கவாசகர் திருவாசகத்திற்குப்பொருள் அம்பலக்கூத்தனே என்று சொல்லிச் சிவச்சோதியிற் கலத்தல்

### 12. திருத்தொட்டித் தீர்த்தம்:

ஆன்மநாதருக்கும் யோகாம்பிகைக்கும் அபிடேகமான நீர் தேங்கி இருக்கிற தொட்டி திருத்தொட்டித் தீர்த்தமாகும். இந்த நீரை முகந்து நீராடுகிறவர்கள் உடலைப்பற்றிய பல நோய்களும் உயிரைப் பந்தித்து இருக்கிற மலப்பிணியும் நீங்கிப் பாதகங்களும் நீங்கப் பெறுவார்கள்.

## 5. திருக்கோயில் பூசை நடைமுறைகள்

ஆவுடையார்கோயிலில் நாடொறும் உஷாக்காலம், திரிகால சந்தி, காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என்று ஆறு கால பூசைகள் நடைபெறுகின்றன.

### *உஷாக்கால பூசை:*

நடுவாசல் காவல்காரர் விடியற்காலையில் நாலரை மணிக்கு மணியடிப்பார்கள். வெளிமண்டபத்தில் நித்திரை செய்யும் நம்பிமார் முதலியோர் மணி ஓசை கேட்டு எழுவர். அனைவரும் நீராடி ஆசாரத்துடன், தத்தம் காரியம் தொடங்குவர். சுயம்பாகிகள் நிவேதனம் தயாரிப்பர். பரிச்சாரகர் சன்னதிகளைத் தூய்மை செய்வர். இடையர்கள் பஞ்சகவ்வியப் பொருள்களும் அபிஷேகப் பாலும் கொண்டு வருவர். நம்பிமார்கள் அனுட்டானம் முடித்து தேவசபைக்கு வந்து பஞ்சகவ்வியம் சேர்த்துப் புண்ணியாகவசனம் செய்து மடைப்பள்ளி முதலான இடங்களில் தெளிப்பர். பிறகு சிற்சபைக்கு பவந்து கெண்டாபூசை, கலசபூசை, சங்கபூசை, துவார பூசைகளைச் செய்து ஆத்மநாதர் சன்னதியைத் திறப்பர். தீபம் போடுவர். அவ்விதமே அம்பாள் சந்நிதி குருந்த மூலம் ஆகிய இடங்களிலும் புண்ணியாகவசன ஜலம் தெளித்துத் தீபம் இடுவர். பிறகு சுவாமி சந்நிதியிலும் அம்மன் சந்நிதியிலும் அபிஷேக

அலங்காரம் நடைபெறும். பிறகு மாணிக்கவாசகர் சன்னதியில் புண்ணியாக வசனம் செய்து கெண்டா பூசை முதலியன செய்து கதவு திறக்கப்படும். கணபதி முதலிய பரிவார மூர்த்திகளுக்கு அபிஷேக அலங்காரம் செய்து தீபாராதனை நடைபெறும். அதன்பிறகு சுவாமிக்கும் குருந்த மூலத்துக்கும் தீபாராதனை நடக்கும். பிறகு அம்பாளுக்கும் மாணிக்கவாசகருக்கும் ஏககாலத்தில் தீபாராதனை நடக்கும். பிறகு மற்ற பரிவார மூர்த்திகளுக்கும் தீபாராதனை நடக்கும்.

இவ்வாறு பூசை நடக்கும்போது சுவாமி சன்னதியில் தட்சிணாமூர்த்தி சகஸ்ரநாமார்ச்சனையும் சுத்தான்ன நிவேதனமும் தீபாராதனையும் நடந்த பின்பு அஷ்டவர்கம் ஓதலும் வேதம் ஓதலும் திருவாவடுதுறை ஆதீனத்துப் பண்டாரச் சந்நிதிகளின் நாமநட்சத்திரத்துடன் ஆசீர்வாதமும் நடக்கும். அதன்பிறகு ஓதுவாமூர்த்திகள் தேவார திருவாசகம் ஓதுவார். இவ்விதமே எல்லாச் சன்னதிகளிலும் தீபாராதனை நடக்கும். ஒவ்வொரு கால பூசையிலும் சுவாமியின் நிர்மால்யம் மாணிக்கவாசகர்க்குச் சாத்தப் பெறும்.

## *திரிகாலசந்தி பூசை:*

இது புதுக்கோட்டை மகாராஜாவின் கட்டளையின்கீழ் நடைபெறுவதாகும். நம்பிமார்கள் சுவாமி சன்னதிக்குப் புண்யாகவசனம் செய்தபிறகு குருந்த மூலத்துக்கு அபிஷேகமும் அஷ்டோத்தரமும் அம்பாளுக்கு அபிஷேகமும் லலிதா சகஸ்ர நாமார்ச்சனையும் மகாராஜாவின் நாம நட்சத்திரத்துக்கு ஆசீர்வாதமும் நடக்கும். பிறகு மாணிக்கவாசகருக்குச் சகஸ்ரநாமார்ச்சனை நடக்கும்.

## *காலசந்தி பூசை:*

நம்பிமார் தேவசபையில் புண்ணியாகவசனம்செய்து சகல இடங்களிலும் தெளிப்பர். வைதீகர் சுவாமி சன்னதி குருந்த மூலம் அம்பாள் சன்னதிகளில் ருத்திர கலசத்தை ஆயத்தம் செய்து

வைப்பர். நம்பிமார் அக்கலசங்களில் பூசை செய்து அபிஷேகம் செய்வர். குருந்த மூல அபிஷேகம் ஆன பிறகு செட்டியார் கட்டளைக்காகச் சகஸ்ர நாம அர்ச்சனை நடக்கும். பிறகு சுவாமி சன்னதி அம்பாள் சன்னதி முதலியவற்றிலும் அபிஷேக அலங்கார தீபாராதனைகள் நடைபெறும்.

### *உச்சிக்கால பூசை:*

இது சேதுபதி மகாராஜாவின் கட்டளையின் கீழ் நடை பெறுவதாகும். முன்சொன்னவாறே புண்ணியாகவசனம் முதலானவைகள் நடைபெறும். சேதுபதி மகாராஜாவின் நாம நட்சத்திரத்துடன் ஆசீர்வாதம் சொல்லப்படும். இக்காலத்தில் சிறப்பாக மாஷாபூபம் நிவேதனம் செய்யப்படும்.

### *சாயங்கால பூசை:*

நம்பிமார் முறைப்படி புண்ணியாகவசனம் செய்து சகல இடங்களிலும் தெளித்துக் கும்பபூசை செய்து சன்னதிகள் அபிஷேகம் நடைபெறும். குருந்த மூலத்துக்குத் தீபாராதனை ஆனபிறகு தும்பை மாலை சாத்திப் பதினெட்டு நாமார்ச்சனை நடக்கும். அம்மனுக்கு லலிதா சகஸ்ரநாமார்ச்சனையும் பாயச நிவேதனமும் நடக்கும்; சாயங்கால பூசையில் பச்சையப்ப முதலியார் கட்டளையின்கீழ்ச் சுவாமிக்கு சகஸ்ரநாமார்ச்சனையும் குருந்த மூலத்துக்கு அஷ்டோத்தரமும், அம்பாளுக்குத் திரிசதியும் மாணிக்கவாசகருக்கு அஷ்டோத்தரமும் நடைபெறும்.

### *அர்த்தசாம பூசை:*

இது உடையாத்தேவர் கட்டளையின்கீழ் நடைபெற்று வருவதாகும். முதலில் கணேசருக்குக் கணேச சகஸ்ரநாமார்ச்சனை நடக்கும். பிறகு நம்பிமார் புண்ணியாகவசனம் வைத்து சகல இடங்களில் தெளித்து முறைப்படி அபிஷேகம் செய்வர். சுவாமிக்குச் சகஸ்ர நாமார்ச்சனையும் வர்க்கான்ன நிவேதனமும் நடக்கும்.

அம்பாளுக்குச் சகஸ்ரநாமாச்சனையும் முத்கான்ன நிவேதனமும் நடக்கும். தீபாராதனையுடன் பூசை முடிவுபெறும்.

### *உற்சவங்கள்:*

இத்தலத்தில் ஆனிமாதம், மார்கழி மாதம் ஆகிய காலங்களில் இரண்டு உத்ஸவங்கள் நடைபெறும். அவற்றுள் ஆனிமாத உத்ஸவம் மகத்தானது. மாணிக்கவாசகர் இத்தலத்தில் உபதேசம் பெற்றுச் சிறப்பெய்தியபடியால் அவர் இறைவனோடு ஒன்றிக் கலந்த ஆனிமகத்தை ஒட்டி உத்ஸவம் நடக்கும். உத்ஸவமும் அவருக்குத்தான் நடைபெறுகின்றது. சுவாமிக்கு உத்ஸவமில்லாதபடி மணிவாசகருக்கு நடப்பதால் இதனைப் பக்தோத்ஸவம் என்று நினைக்கலாகாது. மணிவாசகர் சிவமாகவே விளங்குவதால் இதனைப் பிரமோத்ஸவமாகவே கூறவேண்டும். திருவிழாக் காலத்தில் இடபம் திருத்தேர் முதலான வாகனங்களில் மணிவாசகர் திருவுலா வருகிறார்.

மற்றும் சிவராத்திரி, பங்குனி உத்திரம், கந்தசஷ்டி திருக் கார்த்திகை நவராத்திரி, சோமவாரம், ஆவணி மூலம், முதலான விசேட பூசைகளும் இத்தலத்தில் நடைபெற்று வருகின்றன.



ஸ்ரீ வல்லபை கணபதி



ஸ்ரீ நரசிம்ம மூர்த்தி

# 6. ஆவுடையார்கோயில் சிற்பங்கள்

## சிற்பத்தின் உயர்வு:

ஆவுடையார்கோயில் சிற்பங்கள் புகழ் வாய்ந்தவை. அதிலும் இங்குள்ள கொடுங்கை வேலைப்பாடுகள் உலகப் பிரசித்தமானவை. அந்தக் காலத்தில் சிற்பிகளைக் கூப்பிட்டு! ''நாங்கள் கட்டும் கோயிலுக்குச் சிற்பம் செய்யவேண்டும். அதற்கு ஒப்பந்த ஓலை எழுதிக் கொடுங்கள்'' என்று சொன்னால், அந்தச் சிற்பிகள் ஒப்பந்த ஓலை எழுதும்போது, ''தாரமங்கலம் தூணும், திருவலஞ்சுழிப் பலகணியும் ஆவுடையார்கோயில் கொடுங்கையும் தவிர மற்ற எல்லாவிதமான சிற்ப வேலைகளும் செய்து கொடுக்கிறோம்'' என்று எழுதித் தருவார்கள் என்று கர்ண பரம்பரைச் செய்தி வழங்கி வருகிறது. இந்தச் செய்தியால் ஆவுடையார்கோயிலில் உள்ள கொடுங்கையின் மேன்மை நன்றுகத் தெரிகிறது.

## வல்லபை கணபதி:

வல்லபை கணபதி கிழக்கு நோக்கி வீற்றிருக்கிறார். இவருக்கு இடது பக்கத்தில் வல்லபை நிற்கிறாள். ''விநாயகருக்கு எப்பொழுது கல்யாணம் ஆயிற்று; மனைவி உண்டா?'' என்று சிந்திக்கவேண்டாம்; சில இடத்தில் சித்தி புத்தி என்ற இரண்டு மனைவிகளோடு தோன்றுவார்; திருவலஞ்சுழியில் கமலை, வாணி என்று இரண்டு மனைவிகளோடு காட்சி அளிப்பார். இங்கே வல்லபையோடு தரிசனம் தருகிறார்; பெரிய உருவமும் துதிக்கையும் பத்துக் கைகளும் பெற்றிருக்கிறார். தனக்கே உரிய அங்குசம் பாசம் என்பவற்றையும், தனது தந்தைக்குரிய சூலத்தையும் தனது மாமனை திருமாலுக்குரிய சக்கரத்தையும் தனது தம்பியான முருகனுக்குரிய சத்தி ஆயுதத்தையும் ஏந்தி இருக்கிறார். அதாவது சிவனும் திருமாலும் முருகனும் நானே என்று சொல்லாமல் சொல்கிறார். இவரது துதிக்கை நீண்டு தொங்கி நுனி மட்டும் சுருண்டு அதிலே மோதகத்தை ஏந்தியதாக

அமைந்திருக்கிறது. இவரது காலடியின்கீழ் ஒரு புறத்தே மூடிகம் ஒண்டி ஒடுங்கிப் படுத்திருக்கிறது.

## *உக்கிர நரசிம்மர்:*

ஆயிரக்கால் மண்டபம் என்ற பெரிய மண்டபத்தின் முகப்புத் தூண்களில் மேற்குப் பக்கத்தில் உள்ள முதல் தூணில் இவர் மிகப் பயங்கரமான தோற்றத்தோடு தரிசனம் தருகிறுர். நாமும் அச்சத்தோடு கண்ணை மூடி மூடித் திறந்து பார்க்கிறோம். இவர் வலது காலைத் தொங்கவிட்டு இடது காலை மடித்து வலக்காலின் மேல் வைத்திருக்கிறுர். தனது துடையில் கிழக்கே தலையும் மேற்கே காலுமாக இரணியனைக் கிடத்தி இருக்கிறுர். இவருக்குப் பத்துக் கைகள் உள்ளன. இரணியனின் தலையை இடது கைகளில் ஒன்றிஞல் பிடித்திருக்கிறுர். இரணியனது இரண்டு கால்களையும் வலது கைகளில் ஒன்றிஞல் அமுக்கிப் பிடித்திருக்கிறுர். இரண்டு கைகளால் இரணியனின் மார்பைப் பிளந்து கொண்டிருக்கிறுர், மற்ற ஆறு கைகளில் வலம் இடமாகிய இரண்டு கைகளால் இரணியனது குடலைப் பிடுங்கி மாலையாகச் சூடும் பாவனையில் அந்தக் கைகளைத் தலைக்கு மேலாக உயர்த்திக் குடலின் இரண்டு முனைகளையும் பிடித்துக் கொண்டிருக்கிறுர். எஞ்சிய நான்கு கைகளில் சக்கரம் வச்சிரம் சங்கு கேடகம் என்ற ஆயுதங்களை ஏந்தி இருக்கிறுர். ''இரணியன், தான் ஆயுதத்தால் கொலை செய்யப்படக் கூடாது என்று வரம் வாங்கி இருக்கிறனே, அப்படி இருக்க ஏன் இந்த ஆயுதங்கள்?'' என்று கேட்கிறீர்களா? சரிதான். அப்படிக் கேட்பீர்கள் என்பதற்காகத்தான் அந்த நான்கு கைகளையும் இரணியன் மேல் படாதபடி எட்டிக் கொண்டுபோய் உயர்த்திப் பிடித்திருக்கிறுர். இவருடைய இடது முழங்காலுக்குக் கீழே சிறுவனை பிரகலாதன் அச்சமும் அன்பும் தோன்றும் முகபாவனையோடு நிற்கிறுன். இவ்வளவு அதி அற்புதமாகச் சிற்பி இதைச் செய்ய எவ்வளவு பாடுபட்டிருக்க வேண்டும்! ''நரசிம்மர் மட்டும்தான் இரணியனது குடலை மாலையாகப் போட்டுக் கொள்ள வேண்டுமா? நாமும் அதில் சிறிது பங்குபோட்டுக் கொண்டு போகலாமே'' என்று நினைத்தார்களோ என்னவோ! நரசிம்மரின் குடல் மாலையின் ஒருபகுதியை யாரோ உடைத்து எடுத்துப் போய்விட்டார்.



ஸ்ரீ ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி



ஸ்ரீ காளிதேவி

## *பத்திரகாளி:*

உக்கிர நரசிம்மருக்கு அடுத்த தூணில் காளியின் சிற்பம் காட்சி தருகிறது. இவள் சிவனோடு போட்டியிட்டுத் தோல்வி எய்திய நிலையில் நிற்கிறாள். வலக்காலின் பாதத்தை நன்றாக ஊன்றியும் இடக்காலின் விரல்களை ஊன்றிக் குதிகாலைச் சற்று மேலே தூக்கியும் நிற்கிறாள், காளி என்றால் கோரமும் கோபமும் முகத்தில் தெரியவேண்டுமல்லவா? அவை இரண்டும் இல்லை. நாணம் தவழும் முகமாக இருக்கிறாள். அந்தமுகத்தில் கோரப் பற்கள் இல்லை என்றால் இவளது முகத்தைப் பார்த்துக் காளி என்று அடையாளம் காணமுடியாது. இவளுக்குப் பத்துக் கைகள் இருக்கின்றன. வலப்பக்கத்துக் கைகளில் தமருகம், சக்கரம், சுரிகை, சூலம் என்றவற்றையும், இடப்பக்கத்து நான்கு கைகளில் பாசம், அங்குசம், கேடகம், கபாலம் என்றவற்றையும் ஏந்தி இருக்கிறாள். எஞ்சிய இரண்டு கைகளையும் சேர்த்துத் தனது தோல்வியால் ஏற்பட்ட நாணத்தின் காரணமாகப் பிசைந்தபடி நிற்கிறாள். இவளது உடம்பின் ஒவ்வொரு உறுப்பிலும் அதி உன்னதமாக அணிகளை அமைத்துச் சிற்பி அலங்காரம் செய்திருப்பதை வார்த்தையால் வருணிக்க முடியாது. நேரில் கண்டு சுவைக்கவேண்டும்.

## *ஊர்த்தவ தாண்டவர்:*

பத்திரகாளிக்குஅடுத்த தூணில் (அதாவது மூன்றாவது தூணில்) ஊர்த்தவ தாண்டவரைக் காணலாம். இவரது கம்பீரமான தோற்றம் பார்க்கிறவர்களைப் பிரமிக்க வைக்கிறது. இவருக்கு எட்டுக் கைகள் உள்ளன. வலக்கைகளில் உடுக்கை, அம்பு, அங்குசம், அபயம் என்ற நான்கும், இடக்கைகளில் எரி, மான், வில், மணி என்ற நான்கும் விளங்குகின்றன. இடக்காலைச் சற்று வளைத்தபடி முயலகன் மேல் ஊன்றி இருக்கிறார். முயலகன் சுமை தாங்க முடியாமல் திணறி விழி பிதுங்கித் தலையை மேலே தூக்குகிறான். வலது காலை உயர்த்தித் தலைக்கு நேரே வைத்து உள்ளங்கால் வெளியே தெரியும்படி மேல்நோக்கி (ஊர்த்தவமாகக்) காட்டுகிறார். ஏன் இப்படித் தலைக்கு நேராகக் காலைத் தூக்கி ஆடுகிறார் என்று கேட்கிறீர்களா? இதற்கு **''இழைநக்கி நூல் நெருடும் ஏழை அறிவேனோ குழை நக்கும் பிஞ்ஞகன் தன் கூத்து''** என்று வள்ளுவர் விடை கூறுகிறார். இப்படி காளியோடு போட்டி

போட்டல்லவா கூத்தாடினார். ஆட்டம் அதிவேகம் அடையும்போது வலக்காதின் குழை கழன்று கீழே விழுந்து விட்டது. அதை எடுக்க ஆட்டத்தை நிறுத்தினால் தோல்வி வரும். ஆட்டத்தையும் நிறுத்தாமல் குழையை எடுத்துக் காதில் அணிந்து கொள்ளவும் வேண்டுமே. அதற்காக வலக்காலின் விரலால் குழையை எடுத்து அந்தக் காலை மேலே தூக்கி வலக்காதில் குழையைச் செருகினார். இப்படி இவர் காலைத் தூக்கியதும் காளி அதுபோல் ஆடமுடியாமல் தோற்றுவிட்டாள். இப்படிக் காலைத் தூக்கியதால்தான் காதிலே குழை அணியவும் காளியைத் தோல்வியுறச் செய்யவும் முடிந்தது. இவரது இடக்காலுக்கு இடதுபுறம் நந்தி நின்றுகொண்டு மத்தளம் கொட்டுகிறார். அதே காலுக்கு வலப்புறத்தில் பாணாசுரன் குடமுழா வாசிக்கிறான்.

## *பிட்சாடனர்:*

பெரிய மண்டபத்தின் முகப்புத் தூண்களில் மேற்குப் பக்கத்தில் உள்ள நான்காவது தூணில் பிட்சாடனர் சிற்பம் காணப்படுகிறது. கால்களில் பாதுகை அணிந்திருக்கிறார். மெல்ல அடி எடுத்து வைத்து நடக்கும் தோற்றம் பொலிகிறது. கழுத்திலே கண்டிகை உண்டு. இடுப்பிலே ஆடையில்லை. கைகளிலே சூலம் உடுக்கை கபாலம், மானுக்கு உணவாக அளிக்கும் புல் இவற்றை ஏந்தியிருக்கிறார். இக்கோலத்தை, "அடியில் தொடுத்த பாதுகையும் அசைந்த நடையும் இசை மிடறும், வடிவில் சிறப்ப நடந்தருளி, படியிட்டெழுதாப் பேரழகால் பலிதேர் பகவன்" என்று கவிதையில் வைத்துக் கூறத் தோன்றுகிறது.

## *வில் ஏந்திய முருகன்:*

வில் பிடித்த முருகனின் சிற்பம் பெரிய மண்டபத்துக் கீழ் புறத்துத் தூண் ஒன்றில் காணப்படுகிறது. இப்பெருமான வலக்காலைக் கீழே ஊன்றியும் இடக்காலை மடித்து மயில்மீது ஊன்றியும் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். இவருக்கு நான்கு ஜகைகள் உள்ளன. வலக்கைகளில் வேலும் அம்பும் ஏந்தியிருக்கிறார். இடக்கைகளில் ஒன்றில் வச்சிரம் ஏந்தி மற்றொன்றில் வில்லின் மேல் முனையைப் பிடித்து இருக்கிறார். முருகன் வில் ஏந்துவது உண்டு என்பதை, "வானோர் வணங்குவில்



ஸ்ரீ வில்லேந்திய வேலவர்



ஸ்ரீ சங்கரநாராயணர்

தானைத் தலைவ'' எனத் திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் கூறுவதாலும் அறியலாம்; வில் ஏந்திய முருகன் கோலம் அரிதாகச் சில இடங்களில் மட்டுமே உள்ளது.

### *ரிஷபாந்தகர்:*

வில்லேந்திய முருகனுக்கு அடுத்த தூணில் ரிஷபாந்தகரின் சிற்பம் இருக்கிறது. ரிஷபாரூடர் வேறு; ரிஷபாந்தகர் வேறு. இடப வாகனத்தின் மேல் ஏறி உட்கார்ந்திருக்கும் கோலத்தவர் ரிஷபாரூடர். இடப வாகனத்தைப் பின்னே நிறுத்தி அதற்கு முன்னே நின்றுகொண்டிருக்கும் கோலத்தவர் ரிஷபாந்தகர். இங்கே காணப்படுபவர் இடக்காலைப் பதியும்படி நிலத்தில் ஊன்றி, வலக்காலை இடக்காலுக்கு இடப்பக்கமாக வளைத்து அக்கால் விரலை நிலத்தில் ஊன்றி நிற்கிறார், இவருக்கு நான்கு கைகள் உள்ளன. இவருக்குப் பின்னே இடபம் நிற்கிறது; அந்த இடபத்தில் சாய்ந்தபடி வலக்கையை மடித்து முழங்கையை இடபத்தின்மேல்வைத்து வரத முத்திரை காட்டுகிறார். இடக்கையை இடது துடையில் ஊன்றி ஊருஹஸ்த்தமாக வைத்து நிற்கிறார். மற்ற இரண்டு கைகளில் மழுவும் உடுக்கையும் ஏந்தி இருக்கிறார். ரிஷபம் தனது தலையைத் திருப்பி இவரைப் பார்க்கிறது.

### *சங்கரநாராயணர்:*

ரிஷபாந்தகருக்கு அடுத்த தூணில் சங்கர நாராயணர் சிற்பம் இருக்கிறது. இவருடைய வலப்பாகம் சிவனாக – சங்கரனாக – இருக்கிறது. இடப்பாகம் விஷ்ணுவாக – நாராயணராக – இருக்கிறது. வலப்பாகத்துக் கைகளில் ஒன்றில் மழுவும் மற்றொன்றில் அபய முத்திரையும் காணலாம். இடப்பாகத்துக் கைகளில் ஒன்று சங்கு ஏந்தி இருக்கிறது. மற்றொன்று துடையில் ஊன்றியபடி இருக்கிறது. வலது காலில் துடை அளவுக்குப் புலித்தோலும் இடது காலில் கணுக்கால் வரை பீதாம்பரமும் காணலாம். இங்ஙனம் ஒருருவில் இருவர் வடிவம் பொலிவதற்குப் புராணச் செய்தி ஒன்று கூறப்பட்டாலும் இது நாயக்கர் காலச் சூழ்நிலைக்கு மிகவும தேவைப்பட்ட வடிவமாக இருந்தது என்பதைக் கருதவேண்டும். நாயக்கர் காலத்தில் சைவ வைணவப் போராட்டம் பெருகி இருந்தது. திருமலை நாயக்கன் வைணவ மரபினன்

என்றாலும் சைவத்திலும் பற்றுள்ளவன். அரியும் சிவனும் ஒருவரே என்ற கருத்தை உலகத்தில் பரப்பிச் சைவ வைணவப் போராட்டத்தை நிறுத்த முயன்றான். அதனால் இந்தச் சிற்பம் பல கோயில்களில் அமையுமாறு அவன் ஏற்பாடு செய்தான்.

## *இரண்டு வீரபத்திரர்கள்:*

ஆயிரக்கால் (அறுபது கால்) மண்டபத்துக்கு உள்ளே போனால் அடுத்த வாயிலின் இருபுறமும் இரண்டு வீரபத்திரரைக் காணலாம். இவ்விருவரும் தக்க யாகத்தை அழித்தவர்கள். இவர்களுடைய கோபத்தின் கொடூரத்தை இவர்களின் விழிகளும் புருவங்களும் மீசையும் வெளிப்படுத்துகின்றன. இவ்விருவரில் கிழக்குப் புறத்தில் இருப்பவர் உக்கிர வீரபத்திரர்., இவர் எதையும் பொருட் படுத்தாமல் நிமிர்ந்து நிற்கிறார். இவருக்கு எட்டுக் கைகள் உள்ளன. தலையின் வலப்பக்கத்திலிருந்து காலின் இடப்பக்கம் வரை ஒரு நீளமான சூலம் குறுக்காகக் கீழ்நோக்கி வந்து கீழே கிடக்கும் எச்சனின் கழுத்தில் குத்தியபடி காணப்படுகிறது. நீண்ட அந்த சூலத்தின் அடிப்பகுதியை வலக்கையாலும் நடுப்பகுதியை இடக்கையாலும் பிடித்துக் கொண்டு இவர் நிற்கிறார். மற்ற ஆறு கைகளில் வலப்பக்கத்தில் தமருகம், கத்தி, வேதாளம் என்பவற்றையும் இடப்பக்கத்தில் கபாலம், கேடகம், மணி என்பவற்றையும் ஏந்தியிருக்கிறார். தலையில் அக்கினிக் கொழுந்துகள் காணப்படுகின்றன. மற்றொருவர் தட்ச சிரச்சேத வீரபத்திரர் ஆவார். இவர் மேற்குப் புறத்தில் நிற்கிறார். இவருக்குப் பத்துக் கைகள் உள்ளன. தட்சனைப் பிடித்து இடது துடையில் கிடத்தி இடது கை ஒன்றால் அவன் தலையைப் பிடித்திருக்கிறார். வலது கை ஒன்றில் வாள் ஏந்தித் தட்சனின் தலையை அறுக்கிறார். மற்ற கைகளில் வலப்பக்கத்தில் அம்பும், பரசும், சூலமும், கட்கமும் ஏந்தி இடப்பக்கத்தில் வில்லும் மானும் தமருகமும் கேடகமும் ஏந்திக் காட்சித் தருகிறார்.

## *தியாகராச மண்டபம் கொடுங்கைச் சிறப்பு:*

இந்த மண்டபத்தில் மாணிக்கவாசகரின் மந்திரிக் கோலச் சிற்பமும் துறவுக் கோலச் சிற்பமும் உள்ளன. இந்த மண்டபத்தின் கொடுங்கையின் அழகை வார்த்தைகளால் வருணிக்க முடியாது.



ஸ்ரீ வீரபத்திரர்



ஸ்ரீ வீரபத்திரர்

கருங்கல்லைத் தகடாக்கி அதிலே பல வளைவுகளை உருவாக்கிக் கூரை போட்டதுபோல் அமைந்திருக்கும் திறம் பெருவியப்பை உண்டாக்குகிறது. மரவேலையில் உள்ள நுட்பங்கள் எல்லாம் இங்கே கருங்கல்லில் காணமுடிகிறது. மரச்சட்டங்களில் குமிழ் ஆணி அடித்தாற்போன்ற தோற்றங்களில் கல்லிலும் காட்டிய சிற்பியின் கைத்திறத்தை எப்படித்தான் புகழ்வதென்று தெரியவில்லை. எனவேதான் திருப்பெருந்துறையின் கொடுங்கை உலகப் பிரசித்தமாக இருக்கிறது.

## *வாதவூரரின் அமைச்சர் கோலம்.*

தியாகராச மண்டபத்தில் ஒரு தூணின் ஒருபக்கத்தில் வாதவூரரின் அமைச்சர் கோலமும், அதே தூணில் மற்றொரு பக்கத்தில் அவருடைய துறவுக் கோலமும் உள்ளன. அமைச்சர் கோலம் பெரிய வடிவுடையது. மந்திரிக் கோலத்தில் தலைக்குக் கிரீடம் அணிசெய்கிறது. மந்திரிகளுக்குக் கிரீடம் கிடையாது. வாதவூரர்க்குப் பாண்டியன் விருதுப் பொருள்கள் அளித்தபோது தலைச்சாத்து அளித்ததாகக் கூறப்படுகிறதே தவிரக் கிரீடம் கொடுத்ததாகச் சொல்லப்படவில்லை. அப்படியிருந்தும் சிற்பியின் பேராவல் அமைச்சருக்குக் கிரீடம் வழங்கி இருக்கிறது. காதில் குண்டலம் கழுத்தில் முத்துமாலை மற்றும் பல அணிகலன்கள் காணப்படுகின்றன.

## *துறவுக் கோலம்:*

அமைச்சர் கோலம் இருக்கிற அதேதூணில் மற்றொரு பக்கத்தில் வாதவூரரின் துறவுக் கோலமும் இருக்கிறது. ஏன் இப்படி ஒரே தூணில் இரண்டு கோலத்தையும் சிற்பி அமைத்திருக்கிறான்? சிந்தனை ஓடுகிறது. தாமரையிலையிலும் தண்ணீர் இருந்தாலும் அதில் அது ஒட்டாது. வாதவூரர் புறத்தில் அமைச்சர் பதவி வகித்தாலும் அவரது உள்ளம் துறவு பூண்டே இருந்தது. இரண்டு நிலையும் ஒரே உடம்பில் இருந்தன என்பதைச் சிற்பி நமக்கு உணர்த்த வந்தான், ஒரே தூணில் இரண்டு வடிவத்தையும் வடித்து விட்டான். மணிவாசகரின் அகத்தையும் புறத்தையும் நன்கு அறிந்தவன் அந்தச் சிற்பி.

## *குதிரைச் சாமி — அசுவநாதர்:*

பஞ்சாட்சர மண்டபத்துக்குக் குதிரைச்சாமி மண்டபம் எனவும் மற்றொரு பெயருண்டு. இந்த மண்டபத் தூணில் குதிரைச்சாமி காட்சி தருகிறார். குதிரை பின்னிரண்டு கால்களை ஊன்றி முன்னிரண்டு கால்களை மேலே தூக்கி பாய்வது போல் இருக்கிறது. இதன்மேல் வீற்றிருப்பவர்தான் குதிரைச்சாமி. வாதவூரருக்காகப் பெருந்துறை பெருமான் வேதப் புரவி ஏறிக் குதிரைச் சேவகராகப் போன தோற்றந்தான் இது. அதனால் இக்காட்சியைக் குதிரைச்சாமி, அசுவநாதர் என்று அழைக்கிறார்கள். இவர் தலையிலே கொண்டையிட்டுக் குதிரைக்காரனுக்குரிய உடை உடுத்தி இருக்கிறார். இடது கையால் குதிரை லகானைப் பிடித்து வலது கையால் குதிரைச் சவுக்குப் பிடித்து அதனால் குதிரைத் தலையைக் குத்தும் பாவனை செய்கிறார். இவருக்குப் பூசை நடைபெறுகிறது.

## *குறவன், குறத்தி:*

நற்குணம் வாய்ந்த குறச்சாதி வேடன், ரதிபோன்ற அழகான மனைவியோடு வாழ்ந்தான். அந்த அழகிய குறத்தியை அடைய வேண்டும் என்று குறவர் தலைவன் ஆசைப்பட்டான். இந்த ஆபத்துக்கு அஞ்சி நற்குணத்துக் குறவனும் குறத்தியும் திருப்பெருந்துறைக்கு ஓடிவந்து ஆன்மநாதரிடம் அடைக்கலம் புகுந்தனர். குறவர் தலைவன், திருப்பெருந்துறைக்கும் வந்து குறவனைச் சூழ்ந்துகொண்டான். ஆன்மநாதர் குறவனுக்கு வாள் ஒன்று கொடுத்தார். அதனால் தலைவன் கொல்லப்பட்டான். அடைக்கலம் புகுந்த குறவனுக்கும் குறத்திக்கும் அக்கோயிலில் சிறு தெய்வமாக இருக்கும்படி ஆன்மநாதர் வரங்கொடுத்தார். இந்த வரலாறு தலபுராணத்துள் பேசப்படுகிறது. அந்தக் குறவனுக்கும் ரதி போன்ற குறத்திக்கும் சிற்பி இரண்டு சிற்ப வாழ்வுகளைப் படைத்துள்ளான். அவைகள் மிக அழகான சிற்பங்கள். குறவன் இடது காலை ஊன்றி வலது காலைச்சுழற்றி முன்னேவைத்து இடுப்பை நெளித்துக் கூத்தாடுவதுபோல் நிற்கிறான். அவன் முகத்தில் மீசை தொங்குகிறது. இடது கை விரலால் இடது பக்கத்துத் தொங்கு மீசையை உருவிவிட்டுக் கொள்கிறான். வலது கையை மூடி இடுப்பில் ஊன்றி ஒய்யாரமாகக் காணப்படுகிறான். குறத்தி வலது கையில் பூச்செண்டு பிடித்துத் தலைக்கு நேராக ஒருபுறமாக உயர்த்தி



மந்திரி திருவாதவூரர். திருவாதவூரடிகள். திருவாசகத்துடன் மாணிக்கவாசகர்.

வாதவூரரின் திருக்கோலங்கள்



குறும்பவேளான் லுண்டாட்சன்



அரிமர்த்தன பாண்டியன்



குதிரைவீரராக வந்த சோமசுந்தரர்

இருக்கிறாள். இடது கையில் மேலாடையின் தலைப்பைப் பிடித்துக் கீழ்ப்புறமாக மடித்து நீட்டி இருக்கிறாள். இவளுடைய முன் பக்கத்துத் தலையலங்காரமும் பின் பக்கத்துக் கொண்டையும் பேரழகு வாய்ந்து விளங்குகின்றன. இவள் முழங்கால் அளவாக வட்டுடை கட்டி இருந்தாலும் அதன் மடிப்பழகு சொல்ல முடியாததாக இருக்கிறது. அழகு, குடியிருப்பதற்கு உயர்சாதியை நாடிப் போவது போலக் கீழ்ச்சாதியையும் நாடிக் குடி புகுவது உண்டு என்பதை உணர்த்த வருவது போலக் குறக்குலப் பெண்ணுக்கு இரதியின் அழகை அள்ளிக் கொட்டி இருக்கிறான் சிற்பி. இத்தகைய கலையழகுகளை நேரில் காணும்போது உண்டாகும் பிரமை, பிறகு நினைக்கும்போதும் உண்டாகுமானால் அதுவே உன்னத சிற்பக் கலையாகும்.

ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின்கருணை
இன்றே இன்றிப் போய்த்தோதான்
ஏழை பங்கா எங்கோவே
குன்றே அனைய குற்றங்கள்
குணமாம் என்றே நீகொண்டால்
என்தான் கெட்ட திரங்கிடாய்
எண்தோள் முக்கண் எம்மானே.

திருவாசகம் – குழைத்தபத்து – 3

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு

செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் தலைநகரமாகிய மதுரையம்பதிக்குப் பதினைந்துகல் தொலைவில் அமைந்துள்ளது வாதவூர். அவ்வூரில் ஆதி சைவ மரபில் சம்புபாதாசிருதர் என்பார்க்கும் சிவஞானவதி அம்மையார்க்கும் அருந்தவப் புதல்வராக அவதரித்தார் வாதவூரர்.

பதினாறு வயதுக்குள் எல்லா நூல்களிலும் வல்லவராக விளங்கினார். இவரது கல்வி மேம்பாட்டினையும் ஆற்றலையும் கண்டறிந்த பாண்டிய மன்னன் அரிமர்த்தனன் அவரைஅழைத்து முதலமைச்சராக்கித் 'தென்னவன் பிரமராயன்' என்ற சிறப்புப் பட்டமும் வழங்கிச் சிறப்பித்தான். வாதவூரர் மன்னவனுக்கு உறுதுணையாக இருந்து நாட்டை வளப்படுத்தி நல்லாட்சி நடத்தினார். இவர் மனம் மட்டும் மாதொரு பாகன்பால் மட்டில்லாப் பேரன்பு பூண்டொழுகியது.

ஒருநாள் பாண்டியன் அவைக்களத்திருந்த ஒற்றர் சிலர் வந்து சோழநாட்டுக் கடற்கரையில் குதிரைகள் வந்து கப்பலிலிருந்து இறங்கியுள்ளன என்று தெரிவித்தனர். தன் குதிரைப் படையை வலிமைப்படுத்த எண்ணியிருந்த பாண்டியன் அச்செய்தி கேட்டு நல்லினக் குதிரைகளைப் பார்த்து வாங்கிவருமாறு மிக்க பொன் கொடுத்து வாதவூரரை அனுப்பினான்.

பாண்டியன் கட்டளைப்படி வாதவூரர் படைகள் புடைசூழப் புறப்பட்டு, அங்கையற்கண் அம்மையையும் ஆலவாய் அண்ணலையும் வணங்கிக் கீழைக் கடற்கரை நோக்கிச் சென்றார். செல்லும் வழியில் திருப்பெருந்துறையில் தங்கினார்.

அங்கே ஒரு பூஞ்சோலையில் சிவாகமங்கள் ஒலிக்கும் ஒலி கேட்டது. வாதவூரர் அங்கே சென்றார். குருந்தமர நிழலில் உள்ளம் கவரும் தோற்றத்துடன் ஞானகுருநாதர் அடியார் குழாம் புடைசூழ வீற்றிருக்கும் காட்சியைக் கண்டார். கண்ணீர்வார மெய்ம்மயிர்



ஸ்ரீ குதிரைசுவாமி



தியாகராசர் மண்டப கொடுங்கை

பொடிப்ப அவரது 'திருவடிகளில் விழுந்து வணங்கி, தேவரீர் அடியேனை இனிப் பிறவாவண்ணம் காத்து ஆட்கொண்டு அருளவேண்டும்' என்று வேண்டினார். அவரது பக்குவநிலை கண்ட குருநாதர் அவரைத் திருக்கண்ணால் நோக்கி 'அஞ்சற்க! நின்னை ஆட்கொள்வோம்' என்று திருவாய் மலர்ந்தருளி ஞானோபதேசம் செய்யத் திருவுளங் கொண்டார். முத்திப்பே றளிக்கவல்ல திருவைந்தெழுத்தைச் செவி வழியாகச் சிந்தையுட் புகுமாறு உபதேசித்தருளினார். வாதவூரரின் அகவிருள் அகன்றது. உள்ளொளி பெருகியது. வாதவூரர் சிவானந்த வெள்ளத்தில் திளைத்து நிட்டை கூடி இருந்தார்.

பின்னர் நிட்டை கலைந்து கண்டபோது அடியார் குழாத்தோடு இருந்த குருநாதரையும் பிறரையும் காணவில்லை. திகைப்புற்று வருந்தினார். பிரிவாற்றாமையால் வருந்திக் கண்ணீர் வடித்துப் பாமாலை பாடி உருகினார். தன்னை மறந்தார். தலைவன் தாளே தலைப்பட்டுக் கோயில் திருப்பணிகள் செய்யத் தொடங்கினார். அடியார்களை உபசரித்ததார். திருப்பெருந்துறையிலே தங்கியிருந்து பல பாடல்களை அருளினார். அவை அனைத்தும் விலை மதிப்புடைய மாணிக்கம் போன்றிருந்தமையால் இவருக்கு மாணிக்க வாசகர் என்ற பெயர் இறைவனால் இடப்பட்டது.

இவர் மனம்மாறி, வந்த காரியத்தை மறந்து சிவத் தொண்டில் ஈடுபட்டிருக்கும் செய்தியை ஒற்றர்கள் மூலம் அறிந்த பாண்டியன் மதுரைக்கு வருமாறு ஓலை அனுப்பினான். அரசன் கட்டளையை அறிந்த வாதவூரர் கோயிலுட்சென்று, 'பெருமானே! கொண்டுவந்த பொருளெல்லாம் சிவபுண்ணியத்தின் பொருட்டுச் செலவு செய்துவிட்டேன். குதிரை வாங்கவில்லையே, என்ன செய்வேன்' என்று விண்ணப்பம் செய்தார். 'அஞ்சற்க! ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும் என்று போய்ச் சொல்லுக' என்று அசரீரி கூறியது.

அமைச்சர் மதுரை சென்று 'ஆவணி மூலநாளில் குதிரைகள் வரும்' என்று கூறினார். அரசனும் ஆவணி மூல நாளை எதிர்நோக்கி இருந்தான். வாதவூரர் கொண்டு சென்ற பொருளை எல்லாம் ஆலயப்பணியில் செலவழித்துவிட்டார் என்ற செய்தியைப் பாண்டியன் ஒற்றர்கள் மூலம் அறிந்து பொருளைப் பெறும் பொருட்டு வாதவூரரைச் சிறையில் அடைத்தான்.

அடியார் துன்பம்பொறுத ஆலவாய் அண்ணல், நரிகளைப் பரிகளாக்கித் தேவர்களைப் பாகர்களாக்கித் தாம் குதிரை வணிகனைப்போலப் பாய் பரிமேல் இவர்ந்து குதிரைப் படைகளுடன் மதுரைவந்து பாண்டியனிடம் அவற்றையெல்லாம் ஒப்படைத்தார். மன்னவன் வாதவூரரை விடுவித்துப் பிழை பொறுக்க வேண்டினன்.

நள்ளிரவில் குதிரைகள் எல்லாம் நரிகளாகி பழைய குதிரைகளையும் கடித்துக் குதறிவிட்டு ஊளையிட்டு ஓடி மறைந்தன. இச்செய்தி கேட்ட மன்னன் கடுஞ்சினங்கொண்டு வாதவூரரைச் சிறையில் அடைத்தும் வையையாற்று மணலில் நிறுத்தியும் துன்புறுத்தினன். வாதவூரர் சிவபிரானை நினைந்துருகி வேண்டினர். வையையாற்றினில் வெள்ளம் பெருகியது. மதுரை நகரத்தை அழிக்கத் தொடங்கியது. அரசன் ஒவ்வொருவருக்கும் கரை அளந்து கொடுத்து வெள்ளத்தைத் தடுக்குமாறு கட்டளையிட்டான். வந்தி என்னும் மூதாட்டி வையைக்கரை அடைக்க ஆளில்லாமல் வருந்தி இறைவன்பால் முறையிட்டாள். அவள் வேண்டுகோளுக்கு இரங்கிச் சொக்கநாதர் ஒரு கூலியாளாக வந்து கரை அடைத்துத் தருவதாகக் கூறிப் பிட்டினை முன் கூலியாகப் பெற்றும் கரையை அடைக்காமல் விளையாடிக் கூடையைத் தலையணையாகக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்தார். அதனை ஏவலாளர் மூலம் அறிந்த பாண்டியன் அவரைப் பிரம்பால் அடித்தான். அந்த அடி சராசரங்கள் அனைத்தின் மேலும் பட்டது. உடனே கூலியாளாக வந்தவர் மறைந்தார். வெள்ளமும் குறைந்தது. மன்னவன் யாவும் இறைவன் செயல் என்று தெளிந்தான். வாதவூரண்ணல்பால் சென்று அவரது திருவடிகளில் விழுந்து வணங்கிப் பிழை பொறுத்தருள் புரியுமாறு வேண்டினன்.

மணிவாசகர் அவனைத் தேற்றித் துறவு பூண்டு மதுரையிலிருந்து புறப்பட்டுப் பல சிவத்தலங்களையும் தரிசித்துக் கொண்டு சிதம்பரம் சென்று ஒரு சோலையில் தங்கி நிட்டையில் அமர்ந்திருந்தார். பின்னர் பல பாடல்களைப் பாடியருளினர். இலங்கையிலிருந்து வந்த புத்தர்களை வாதில் வென்றார். இலங்கை மன்னன் மகளாகிய ஊமைப் பெண்ணைப் பேசச் செய்தார். பல அற்புதங்களைச் செய்தார்.



குறவன்



குறத்தி

மணிவாசகனுர் தில்லையில் வாழ்ந்துவரும் நாளில் அவரை நாடி ஆனந்தக் கூத்தன் ஓர் அந்தணர் வடிவங்கொண்டு வந்து அவர் பாடிய பாடல்கள் அனைத்தையும் கூறும்படி கேட்டு ஓலையில் எழுதிக்கொண்டார். பின்னும் ''பாவை பாடிய வாயால் பொன்னம்பலவனைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்டு கோவை பாடுக'' என்று கேட்டு அதனையும் ஓலையில் எழுதிக் கொண்டார். ஓலையின் இறுதியில் ''மாணிக்கவாசகர் சொற்படி அழகிய சிற்றம்பலமுடையான் எழுதியது'' என்று கைச்சாத்திட்டுப் பொற்சபையின் பஞ்சாக்கரப்படியில் வைத்து மறைந்தருளினுர்.

தில்லைவாழந்தணர் அவ்வேட்டினைக் கண்டு பிரித்துப் படித்துப் பார்த்து மிக்க வியப்புடன் மணிவாசகரை அவற்றிற்குப் பொருள் கூறுமாறு வேண்டினுர். மணிவாசகர் நடராசப் பெருமான் திருமுன் நின்று 'இவற்றிற்குப் பொருள் இவ்வானந்தக் கூத்தனே யாவான்' என்று கூறிய அளவில் அங்கு தோன்றிய சோதியுள்ளே அனைவரும் காணும்படியாக இரண்டறக் கலந்தருளினுர்.

## *மாணிக்கவாசகர் வாழ்த்து*

தூயதிரு வெண்ணீறும் கண்மணியும்
ஐந்தெழுத்தும் சுரந்து வாழ்க
ஆயபெருந் துறைவாழ்க ஆன்மநா
யகர்வாழ்க அருள்சூல் கொண்டு
மேயசிவ யோகபரா பரைவாழ்க
வாதவூர் விமலர் வாழ்க
நேயமலி அம்பலத்துள் நடம்நவிலும்
குஞ்சிதத்தாள் நீடு வாழ்க.

திரிசிரபுரம்
மீனுட்சிசுந்தரம் பிள்ளை

உ
**Sivamayam**

# A BRIEF ABOUT THIRUPPERUNTHURAI

Thirupperunthurai - Oh! what a lovely, heavenly place - is an attraction for the people, who are interested in religious faith as well as in architecture. Thirupperunthurai - commonly known as Avudaiyarkoil - is located in the east coastal area of Tamil Nadu in Pudukkottai District, near Arantangi - about 15 K.M. It can be reached either by train or by bus from Mayiladuthurai or from Tiruchirapalli. This lovely village town is surrounded by a river, water tanks, lakes and paddy fields.

Sri Athmanathaswamy Temple at Thirupperunthurai is unique in its nature. There is no idol or image or statue on the main shirine of Athmanatha (the main diety - Siva) and Yogambigai (the goddess - Shakti). It is believed that Lord Shiva is emerged in formless form in this temple. The Shakti Peedam is also formless.

Lord Siva emerged at Thirupperunthurai as Guru in human form and taught Gnana to saint Manickavachakar. It is also believed that this temple was constructed by St.Manickavachakar - the

author of the eighth Thirumurai, the famous Thiruvachakam - in early Pandavas style.

The architec and sculptures in this wonderful temple is breath - taking. It is worth to note, watch and study the sculptures of Veerabatra, Urthuvamoorthy, Narasimha moorthy, Kali, Maravan, Village girl and of-course the world famous Granite Kodungai.

A visit to this holy place and worship of Sri Athmanathar and Sri Yogambigai is life long memorable event to those with religious faith. And those, who are interested in architecture, will have a wonderful time for their studies, if they visit this temple.

May the Almighty - Sri Athmanatha - shower the bliss to one and all.

திருப்பெருந்துறை திருக்கோயிலில் காணுதற்கு இனிய

# அபூர்வ சிற்பங்கள் வேறு சில

1. டுண்டி விநாயகர் சிற்ப உருவம்.
2. உடும்பும் குரங்கும்
3. கற் சங்கிலிகள் – சங்கிலியின் நுனியில் பாம்பு ஒன்று பின்னிக்கொண்டு தலையினைக் காட்டுவது.
4. இரண்டே தூண்களில் ஓராயிரம் கால்கள்.
5. 1008 சிவாலயங்களில் உள்ள இறைவன் இறைவியர் திருவுருவங்கள்.
6. பல நாட்டுக் குதிரைச் சிற்பங்கள்.
7. 27 நட்சத்திர உருவச் சிற்பங்கள்
8. நடனக்கலை முத்திரை பேதங்கள்.
9. சப்தஸ்வரக் கற் தூண்கள்.
10. கூடல்வாய் நிழல் விழும் பகுதி பசுமாட்டின் கழுத்து போன்று காணப்படுதல்.

